9th September 1959]

SRI P. S. CHINNADURAI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திட்டத்தின் கீழே பல்லடம், சூளூர், திருப்பூர் முதலிய இடங்களில் குட்டைகள் ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர்கள் சொல்லும் இடங்களில் குட்டைகள் ஏற்படுத்துவதைத் தவிர வேறு வகையில்லை. இந்த விஷயத்தில் கலக்டர் சிபாரிசை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆரம்பத்தில் 1, 2 நிறைவேற்றி, அதற்கு மேல் வேண்டிய அளவுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

SRI A. R. SUBBIAH MUDALIAR : பற்றுக்குறை இடங்கள் என்று அரசாங்கம் ஏதாவது இன்வஸ்டிகேட் செய்து ஒரு லிஸ்ட் வைத்திருக்கிறதா? அதில் ஏதாவது ப்ரயாரிடி லிஸ்ட் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு அம்மாதிரி அரசாங்கத்தினிடம் ஒன்றும் இல்லை என்று சொன்னேன்.

SRI R. SWAMINATHA MERKONDAR : மத்திய அரசாங்கத்தால் அளிக்கப்படும் டிரில்லிங் பம்ப் திட்டத்தை வறண்ட பிரதேசங்களுக்கு விஸ்தரிக்கும் உத்தேசம் அமைச்சர் அவர்களுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ரிவர் பம்பிங் ஸ்கீமை வறண்ட பிரதேசங்களில் செய்யமுடியாது.

SRI R. SWAMINATHA MERKONDAR : டிரில்லிங் பம்ப் ஸ்கீம்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தண்ணீர் இருக்கும்படியான இடங்களில் எவ்வளவு பாதாளத்திலிருந்தாலும் டிரில்லிங் பம்ப் வைத்துத் தண்ணீர் கொண்டு வரலாம். வறண்ட பிரதேசங்களில், ஏரிகள், கண்மாய்கள் முதலியவைகளைத் தான் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது.

Kayalpatnam Water-supply Scheme

*235 Q.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) when the Kayalpatnam Water-supply Scheme was sanctioned;

(b) when the work was commenced; and

(c) the reasons for the delay in the execution of the same?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) The Tiruchendur-Malayalam composite water-supply scheme was sanctioned in September 1949.

(b) The work was commenced during 1950-51.

(c) The delay in the execution of the scheme was due to the delay in securing the required pumpsets. The pumpsets have been procured. The work is expected to be completed within 2 or 3 months.